ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1839/42 - 2013 දෙසැම්බර් මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2013.12.05

*1839/42 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு**

*அமைச்சரவையினால் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு 57 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்*

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 57 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், 2013.10.31 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்கள் கையளிக்கப்பட்ட 1733/52 ஆம் இலக்க, 2011.11.25 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையின் அட்டவணையில் பகுதி II இலக்கம் 1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் திணைக்களத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அதற்கு மேற்பட்ட வரிசையினர் தொடர்பாக கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் இயைபுடைய ஏற்பாடுகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன.

2.

| நிரல் I<br>உத்தியோகத்தர்கள் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் அதற்கு மேற்பட்ட வரிசையினரும் | பொலிஸ் திணைக்களத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (i) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளுக்கு ஏற்ப இடமாற்றம் செய்தல்<br>(ii) தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணை யில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை |

3. இத்திருத்தம் 2013.08.16 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

ரி. எம். எல். சி. சேனாரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்டி,
கொழும்பு 05,
2013, திசெம்பர் 05.

12- 901



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.